# மில்க்வைற் செய்தி
# Milk White News

தபாற்பெட்டி இல. 77 யாழ்ப்பாணம். தொலைபேசி: 7233

கௌரவ ஆசிரியர்: திரு. க. சி. குலரத்தினம் ★ மாசி 1982 ★ இதழ் - 74



## நன்மையும் நாடொப்பனவும்

நன்மை கடைப்பிடி, நாடொப்பன செய், ஊரோடு ஒத்து வாழ், ஒப்புரவொழுகு என்றெல்லாம் பெரியவர்கள் நமக்கு நல்வழி கூறுவார்கள். சிங்களவர் மத்தியிலும் பெரியவர்கள் சிட்டாசாரம் கூறுகிறார்கள். சிட்டாசார நெறி உலகப் பொதுநெறி. எல்லோரும் நல்லவர்களாய் வாழமுடியும்.

மாணாக்கர் மாணாக்கியர் மத்தியில் எல்லோரும் முதற்பிள்ளையாய் வருதல் முடியாது. எல்லோரும் ஓட்டப்போட்டியில் முதலிடம் பெறமுடியாது. ஆனால் எல்லோரும் அடக்கம் உள்ளவராய், நல்லவராய், நன்மை செய்பவராய், ஒழுக்கம் உள்ளவராய், சுத்தம் சுகாதாரம் உள்ளவராய், சோம்பல் இல்லாதவராய், நல்லன பேசுபவராய் நல்லன செய்பவராய் வாழ முடியும்.

இன்று போக்குவரத்துச் சாதனங்கள் விரைவும் வேகமும் வசதியும் கொண்டனவாதலால் பிறநாட்டவர் பலர் எங்கள் ஊரைப் பார்த்துப் போக உல்லாசப் பிரயாணப் போக்கில் யாத்திரிகர்களாயும் வருகிறார்கள். அவர்கள் நம்மை அறிந்துபோவதை நாம் கவனித்துக் கொள்வதில்லை. அவர்கள் நம்மைப் படமெடுத்தும் போகிறார்கள். எனவே உலகம் எங்கும் புகழ்பெற்ற தமிழர், இலங்கையர் என்னும் நாம் வீதியிலாவது, பாடசாலையிலாவது, வழிபாட்டிடத்திலாவது, விளையாட்டிடத்திலாவது, எங்காவது நல்லவழியில் ஒழுகுதல்வேண்டும்.

நமக்கும், நம் குடும்பத்துக்கும், உறவினர்க்கும், பாடசாலைக்கும், ஊருக்கும் நாட்டுக்கும் நம்மால் நல்ல பெயர் உண்டாதல் வேண்டும். பிள்ளைகள் அணிந்து போகும் சீருடையைக் கொண்டுதான் இந்தப் பிள்ளைகள் இன்ன பாடசாலையினர் என்று அறியத் தேவையில்லை. அவர்தம் நடையிலும் பேச்சிலும் சாயலிலும் போக்கிலும் நன்கறியுமாறு நாம் ஒழுகுவோமாக. ஒழுக்கம் விழுப்பம் தரும்.



மணிப்புரி மலர்ச்சிபெற்று வாழ,
மில்க்வைற் தொழிலதிபர் மரங்கள் நாட்டினார்.

★ தொழிலில் பெரிது சிறிது என்ற பேதம் இல்லை ★

உ
சிவமயம்



# கடவுள் வணக்கம்

## திருநாவுக்கரசுநாயனுர் தேவாரம்
## இலிங்கபுராணத் திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

செங்க ணனும் பிரமனுந் தம்முளே
எங்குந் தேடித் திரிந்தவர் காண்கிலர்
இங்குற் றேனென் றி லிங்கத்தே தோன் றினன்
பொங்கு செஞ்சடைப் புண்ணிய மூர்த்தியே.

திருச்சிற்றம்பலம்

செங்கண்ணனுய திருமாலும் நான்முகனுன பிரமனும் தம்முள்ளே தேடித்திரிந்தும் காணும் வல்லமையில்லாதவர்களுக்குக் கங்கையாறு பொங்கித் தங்கும் செஞ்சடையினராய, புண்ணியக்கடவுளாய சிவபெருமான், ''இங்குற்றேன்'' என்றருள்செய்து இலிங்கவடிவில் தோன்றினன்.

### இலிங்கோற்பவமூர்த்தி

எங்கும் அருவநிலையில் வியாபித்து நிறைந்துநின்ற சிவபெருமானை, அகந்தை நிறைந்த திருமாலும் அறியாமை நிறைந்த நான்முகனும், அங்குமிங்கும் தேடியும் காணமுடியாத அகங்கார மமகார நிலையில், புண்ணியந்திரண்ட திருவடிவான சிவபெருமான், அருவத் திருமேனியை விட்டருளி, அருவுருவத் திருமேனியாய சிவலிங்கத்திலே தோன்றித் திருவருள் பாலித்தார்.

சரியை கிரியை யோகம் ஞானம் என்னும் நான்கு பாதங்கள் என்னும் மார்க்கங்களுள் முதற்படியினதாய சரியை இறைவழிபாட்டுக்கு இன்றியமையாதது என்று எமக்கு விளக்குவதற்கு அந்நெறியில் எண்பத்தொரு ஆண்டுகள் வாழ்ந்த அப்பர் அடிகள் இலிங்கபுராணத் திருக்குறுந்தொகை என்னும் இத்திருப்பதிகத்தை அருளிச் செய்துள்ளார்.

ஒளிமயமான இறைவனைத் திருமாலும் பிரமனும் மலர்தூவி நெருங்கி நின்று வழிபட நினைந்திலர். நீராட்டி அபிடேகஞ்செய்ய நினைந்திலர், சாந்து அணிந்து வழிபட நினைந்திலர், சிவபெருமான் எழுந்தருளும் திருக்கோயில் வீதிகளில் உழவாரத் திருப்பணி செய்து, சாணந் தெளித்து, பூக்கள் பறித்துப் பூசைசெய்ய நினைந்திலர், பூமாலை புனைந்து இறைவனை அழகுசெய்து கண்டுமகிழ நினைந்திலர், நெய்யும் பாலும்கொண்டு இறைவனைத் திருமஞ்சனமாட்ட நினைந்திலர், பொய்யையும் வஞ்சக வார்த்தையையும்போக்கி உள்ளன்போடு போற்ற நினைந்திலர், எங்குங் கிடைக்கக்கூடிய எருக்குமலர் பறித்து மாலைசெய்து சூட்டவும் நினைந்திலர், ஆணவம் நிரம்பியவராய் இறைவனை அட்டாங்கமாக வீழ்ந்துவணங்க நினைந்திலர், திருநீறு பூச நினைந்திலர், உருத்திராக்க மாலை அணிய நினைந்திலர், வெண்ணிறச் சங்கு ஊதி வழிபட நினைந்திலர். இத்தகைய இயல்பினராய திருமாலும் நான்முகனும் அழகுநிறைந்த ஒளிநிற வண்ணனும், உலகத்தவனும், கபாலியும், தொங்கிய கோவண ஆடையினனும், இடப வாகனனும், மன்மதனைக் காய்ந்தவனும், அண்டத் தலைவனும், சிட்டாசாரம் உள்ளவனுமான இறைவனைத் தேட முயன்று கண்டிலர்.




## வாழ்க்கைத் துணைநலம்

**இல்வாழ்வுக்கு உறுதுணையான நல்லறமனைவியின் நற்குணங்கள்.**

தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்.

கற்பு நெறியில் தன்னையும் நெறிவழுவாது காத்துக் கொண்டு, தன் கணவனையும் காப்பாற்றி, தகுதியமைந்த தங்கள் குடிப்புகழையும் காத்து, தன் கடமைகளைச் செய்வதில் தளர்வில்லாதவளே இல்வாழ்வுக்கு ஏற்ற பெண்.

**Virtue of the Housewife**

She is the wife who guards her virtue, looks after her husband with care and love, maintains the reputation of both.

## 1982 பெப்பிரவரி மாத நிகழ்ச்சிகள்

| | | | |
|---|---|---|---|
| 2 | செவ்வாய் | — | கார்த்திகை விரதம் |
| 4 | வியாழன் | — | ஏகாதசி விரதம் |
| 6 | சனி | — | சனிப் பிரதோஷ விரதம் |
| 7 | ஞாயிறு | — | தைப்பூசம். பூரணை விரதம் |
| 8 | திங்கள் | — | ஆயிலியம் |
| 9 | செவ்வாய் | — | கீரிமலை: நகுலேசுரர் கொடி |
| 19 | வெள்ளி | — | ஏகாதசி விரதம் |
| 21 | ஞாயிறு | — | பிரதோஷ விரதம் |
| 22 | திங்கள் | — | மகாசிவராத்திரி விரதம் |
| 23 | செவ்வாய் | — | அமாவாசை விரதம் |

**பணிவிடையால் மனம் தூய்மை அடைகிறது**

# சைவசித்தாந்தக் கோட்பாடுகள்

சிவாகமங்களைத் தமக்குச் சிறப்பு நூல்களாகக் கொண்ட சைவசமயிகள் ஆகமாந்திகள் எனவும் பெயர் பெறுவர். சைவசமயிகள் கண்ட தத்துவப் பெருநெறி சித்தாந்தம் எனும் சிறப்புக்குரியதாகும். அந்நெறியினைச் சங்ககாலப் புலவர்கள் தங்கள் பாடல்களில் அருமையாகப் பாடியுள்ளார்கள்.

இந்த உலகத்தையும் ஆன்மாக்களுக்கு வேண்டிய உடம்பையும் போகங்களையும் படைத்து உபகரித்தவர் இறைவனாகிய பதி. இவ்வுலகில் பிறவியெடுத்துள்ள கோடிக்கணக்கான உயிர்கள் ஆன்மாக்களாகிய பசுவர்க்கம். ஆன்மாக்களைப் பந்தித்து நிற்கும் மலமாய தொடர்பு பாசம். பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள் உண்மையை முதலிற் பேசிய தத்துவமே சைவசித்தாந்தம்.

சைவ சித்தாந்த தத்துவக் கோட்பாடு செந்தமிழில் எழுந்த திருமுறைகள் பன்னிரண்டிலும் மறைந்துகிடக்கிறது. பன்னிருதிருமுறைகளையும் அருளிய இருபத்தேழு அடியார்கள் தங்கள் 18000 பாடல்களில் இறைவனையும் ஆன்மாக்களையும் பாசத்தையும் பரவலாகப் பாடியதோடு, இறைவன் பசுக்களின் பாசத் தொடரை நீக்கிப் பரிசுத்தஞ் செய்து பக்குவப்படுத்தித் தன்னடிக்கீழ் முத்தியின்பம் பாலித்தருளுவர் எனப் பரவிப் பாடியருளியுள்ளார்கள்.

தேவாரத் திருமுறை முதலாகப் பதினொராந் திருமுறையீறாகப் பாடியருளியவர்கள் சைவசித்தாந்தக் கோட்பாட்டைப் பாலில் நெய்போல் பரவிக் காட்டியுள்ளார்கள். பாலில் நெய் போல் ஆழ்ந்து கிடக்கும் சைவத் திறனைத் தயிரில் நெய்போல் மிதக்கக் காட்டிப் பாடியருளியவர் பன்னிரண்டாந் திருமுறையென்னுந் திருத்தொண்டர் புராணம் பாடிய சேக்கிழார் சுவாமிகளாவர்.

தத்துவம் என்பது வாழ்க்கை அநுபவத்திலிருந்து உண்டாவது என்பதைச் சேக்கிழார் சுவாமிகள் தமக்கு மூன் வாழ்ந்த அறுபத்து மூன்று நாயன்மார் வாழ்க்கைத் திறத்திலிருந்து காட்டியுள்ளார். தத்துவம் வாழ்வை வளம் படுத்த அமைவது. அது மெய்யுணர்வு. மெய்யை மெய்யென்று மெய்யாகக் கண்டு மெய்கூறுவது. அதுவே வாழ்வின் குறிக்கோளாயமைவது. மெய்யை மெய்யாகக் கூறத் தெரியாதவர் கூட்டத்திலகப்பட்ட தம்மைக் ''குறிக்கோளில்லாது கெட்டேன்'' என்றும் ''காத்தாள்பவர் காவல் இலாமையிற் கெட்டேன்'' என்றும் அப்பர் அடிகள் பலவிடங்களிற் பாடியருளியுள்ளார்.

சைவசித்தாந்தம் என்பது சிவநெறிக் கொள்கை சிவநெறிக் கொள்கை பற்றி எழுந்த சித்தாந்த நூல்கள் சேக்கிழார் காலத்திற்குப் பின்னரே தோன்றியனவாகும். சித்தாந்த நூல்கள் கூறும் செம் பொருளைச் சேக்கிழாரே முதலில் சாங்கோபாங்கமாக விரித்துக் கூறியுள்ளார், விளக்கியுள்ளார்.

சித்தாந்த சாத்திரங்களில் வழங்கும் பரிபாஷைகள், குறியீடுகள் பலவற்றைச்சேக்கிழார் முன்னமேயே சொல்லியுள்ளார். பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள் உண்மை, நல்வினை தீவினையாகிய இருவினைகள், பெத்தம் முத்தி ஆகிய ஆன்ம நிலைகள், சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நால்வகை மார்க்கம், இருவினையொப்பு, மலபரிபாகம், சத்திநிபாதம் ஆகிய ஆன்ம முன்னேற்றப் படிகள், சிவதீட்சை, உபதேசம், திருவைந்தெழுத்து ஆகிய குருவருட் பேறுகள் முதலியனவற்றின் வரைவிலட்சணங்களும் விளக்கங்களும் சேக்கிழார் பாடல்களில் பலவிடங்களில் வந்துள்ளன.

சைவத்திறனை விளக்குவதற்குச் சேக்கிழார் எடுத்தாண்ட சொற்றொடர்கள் தூய தமிழ் மணங்கமழும் தன்மையன. சிவம் பெருக்கும் இயல்பின. சிவபெருமானை பசுபதியார் என்றும், அவர் பந்தம் வீடு தரும் பரமன் என்றும் பாடுவர். இருவினைப் பாசமும் ஆர்த்தல், இருவினை வலையிடை நிலை சுழல்தல், நிலைப்பட்ட மெய்யுணர்வு நேர்படல், ஒன்றியுடனுதல், வினைகள் ஒத்துத் துலையென நிற்றல், அருட்டிரு நோக்கம் முதலியன யாவும் சைவ சித்தாந்தத் தொடர்களாகும்.

சேக்கிழார் பன்னிரண்டாம் நூற்றுண்டின் முற்பகுதியில் 1123–1148 இரண்டாம் குலோத்துங்க சோழன் காலத்திற் பாடிய பாடலின் கருத்துச் சைவசித்தாந்த விளக்கமாயிருத்தலையும், அதனையே பதினுன்காம் நூற்றுண்டின் முற்பகுதியில் 1313 ஆம் ஆண்டளவில் உமாபதி சிவாசாரியர் பாடியுள்ளதையும் படித்துப்பார்க்கலாம்.

''செய்வினையும் செய்வானும்
அதன்பயனும் கொடுப்பானும்
மெய்வகையால் நான்காகும்
விதித்தபொருள் எனக்கொண்டே
இவ்வியல்பு சைவநெறி
அல்லவற்றுக் கில்லையென
உய்வகையாற் பொருள்சிவனென்
றருளாலே உணர்ந்தறிந்தார்.''

— சேக்கிழார்

''செய்வானும் செய்வினையும்
சேர்பயனும் சேர்ப்பானும்
உய்வான் உளனென்று உணர்.''

— உமாபதி சிவாசாரியர்

இங்ஙனமாகவே ''விண்ணின் பயனும் பொழி மழையும் வேதப் பயனும் சைவமும் போல்'' எனச் சேக்கிழார் பாடியதை உமாபதிசிவம் ''வேதாந்தத் தெளிவாம் சைவசித்தாந்தம்'' என்பர். மானைக்காட்டி மானைப் பிடிக்கும் வழக்கத்தைப் பார்வை எனவழங்குவதைச் சேக்கிழார், ''எண்ணில் பார்வை கொண்டு வேடர் எம்மருங்கும் ஏகினுர்'' என்பர். பார்வை பழக்கப்பட்ட மிருகம், இதனை உமாபதியார் ''பார்வையென மக்களை முன் பற்றிப் பிடித்தற்காம் போர்வை'' எனக் குருவடிவந்தாங்கி மானுடச் சட்டையில் சிவபெருமான் எழுந்தருளி ஆன்மாக்களை உய்யக் கொள்வதைக் குறிப்பிடுவர்.

உமாபதி சிவாசாரியரின் குருவுக்குக் குருவாய அருணந்தி சிவாசாரியரும் சேக்கிழார் கருத்துக்களை எடுத்தாண்டு சித்தாந்த சாத்திரஞ் செய்தருளியுள்ளார்.

(தொடர்ச்சி 4ஆம் பக்கம்)

★ கருத்து வேறுபாடு என்பது மக்களின் போக்கு ★

# உழைப்பின் உயர்வு

இற்றைக்கு ஐம்பது ஆண்டுகளுக்கு முன் யாழ்ப்பாணம் எங்கும் சுருட்டுக் கொட்டில்கள் இருந்தன. குடிசைக் கைத்தொழிலாகச் சுருட்டு ஆயிரக்கணக்கில் உற்பத்தியாகி மலை நாடெங்கும் மதிக்கப்பெற்றுப் பெருந்தொகையாக விற்கப்பெற்ற காலம் அது.

சில முதலாளிமார் தரமான கோடா தயாரிப்பதில் திறமை பெற்றிருந்தார்கள். அவர்களுள் ஒருவர் செட்டியார் ஒருவரிடம் அடிக்கடி கடன் வாங்குவது வழக்கம்.

ஒருமுறை செட்டியார் தமிழ் நாட்டுக்குப் பிரயாணமானபோது, தமக்கு நம்பிக்கையுள்ள கணக்கப்பிள்ளையிடம் வட்டிக் கடையை ஒப்படைத்துச் சென்று சில மாதங்கள் கழித்துவந்தார்.

பேரேட்டில் பக்கங்கள் தோறும் செல்லையாபிள்ளை செல்லையாபிள்ளை என்னும் பெயர் கடன் பெற்றவர் நிரையில் எழுதப்பட்டிருந்தது. செட்டியார் நல்லவர் நகைச் சுவையாகப் பேசுவார். "என்ன கணக்கப்பிள்ளை! நீ செல்லையாபிள்ளை, செல்லையாபிள்ளை என்று கொடுத்திருக்கிறாயே. யார் அந்தச் செல்லையாபிள்ளை? அவர் கடனை வட்டியுடன் மீளத் தருவாரா?" என்று கேட்டார்.

கணக்கப்பிள்ளை, "ஆமாம்! அவர் நல்லவர். நாணயமானவர். நாகரிகம் உள்ளவர். நம்பிக்கையாகத் தருவார்" என்று பணிவோடு சொன்னார்.

அடுத்த நாள் செட்டியார் குதிரை வண்டியில் ஏறிச் செல்லையா வீட்டுப் பக்கம் போனார். வாசலில் கோடா கமகம எனக் கொதித்துக் கழந்தது. முற்றத்தில் தொழிலாளி ஒருவன் விறகு பிளந்து கோடா அடுப்பெரித்து நின்றான்.

"முதலாளி உள்ளே இருக்கிறாரா?" என்று செட்டியார் கேட்டார். "ஆம்ஆம் வாருங்கள். உள்ளே போயிருங்கள். அவர் வருவார். செட்டியார் தலைவாசலில் நாற்காலியில் அமர்ந்தார்.

மறுபக்கத்தால் முதலாளி "ஐயா" என்று அழைத்தவாறு கூப்பியகைகளோடு வந்தார். அவரைக் கண்டதும் செட்டியார் பிரமித்தார். "என்ன ஐயா நீங்களே விறகு பிளந்தீர்களே! "என்று வியப்போடு கேட்டார்.

"ஆமாம் ஐயா! இன்று இதற்குரிய தொழிலாளி வரவில்லை. போதிய நெருப்பில்லாவிட்டால் கோடா பதம் கெட்டுப் போகலாம். அதனாலே நானே அந்த வேலையைச் செய்தேன்." என்றார். செட்டியார் வாய் நிறைய வெற்றிலையை அதக்கிக்கொண்டு "நான் போய் வருகிறேன்" என்று கூறி விடைபெற்றுத் தம் வழியே சென்றார்.

வட்டிக்கடைக்கு மீண்ட செட்டியார் புன்முறுவலோடு, "கணக்கப்பிள்ளை அந்தச் செல்லையாபிள்ளை எவ்வளவு கேட்டாலும் கொடுத்திடு. அந்த மனிதன் உடம்பைப் பிழிந்தாகுதல் தன் கடனை அடைக்கக் கூடிய உழைப்பாளி" என்று பாராட்டினார். உழைப்பின் வராதது ஒன்றுண்டோ? ★

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

## சைவசித்......

இவருக்கும் முந்தியவரான திருவியலூர் உய்யவந்த தேவரும், அவரின் சீடரான திருக்கடவூர் உய்யவந்த தேவரும் தங்கள் திருவுந்தியார், திருக்களிற்றுப் படியார் என்னும் சித்தாந்த சாத்திரங்களில் சேக்கிழார் தொடுத்த சொற்றொடர்களை ஆண்டுள்ளார்கள்.

சேக்கிழார் உயிர், ஆணவ மலம், இருவினைகள் மாயைகள், திரோதான சத்தி, ஞானாசிரியர், ஞானம், சிவ திட்சை, அத்துவா, சுத்தான்மா என்பவற்றை அமைவாக விளக்கியுள்ளார். வினையைச் செய்வதும் வினையை அனுபவிப்பதும் ஆன்மா. வினை சடமாகையால் செய்தவரைத்தானே சென்று அடையாது நாடாது. வினையைச் செய்தவன் பால் அதனை ஊட்டுவிப்பதற்கு ஒரு முதல்வன் உள்ளான் என்பன போன்ற கருத்துக்கள் சைவ சித்தாந்தம்.

ஆன்மாக்கள் என்பார் சகலர், பிரளயா கலர், விஞ்ஞான கலர் என மூவகையினரி என்பதும் அவர்களுக்கெல்லாம் சிவபெருமான் அருள்பாலித்தல் வெவ்வேறு வகையினதாம் என்னும் சித்தாந்தக் கருத்தைச் சேக்கிழார் பதினைந்து நாயன்மார் வரலாற்றில் விளக்கியுள்ளார். பரம்பொருள் ஒருவரே என்றும் அவர் சிவபெருமானே என்றும் பெறுவது சிவன் பாலன்பே என்றும் பெரியபுராணம் முழுவதிலும் சேக்கிழார் பெருமான் விளக்கியுள்ளார்.

சைவ வாழ்வை விளக்கும் சேக்கிழார் திருநீறு, உருத்திராக்கம், திருவைந்தெழுத்து, தீட்சை, சிவபூசை என்பனவற்றை வற்புறுத்திப் பாடுவர். சேக்கிழார் பக்தியைப் பற்றிப் பாடுவதையே உள்ளீடாக அறியக்கூடியதாகும். அவர் தம் பக்திப் பாடல்களில் தெய்வம் மணக்கும். பக்தியால் சிவபோகம் முதிர்ந்து பயன் தருவதை நாயன்மார் அநுபவத்தில் நன்கு காட்டியுள்ளார்.

சிவதொண்டர் தம் பெருமை கூறப்புகுந்த சேக்கிழார், சிவதொண்டர்கள், "நின்றாலும் இருந்தாலும் கிடந்தாலும் நடந்தாலும் மென்றாலும் துயின்றாலும் விழித்தாலும் இமைத்தாலும் மன்றாடும் மலர்ப் பாதம் ஒருகாலும் மறவாமை குன்றாத உணர்வுடையார் தொண்டராம் குணமிக்கார்" என்பர்.

சைவசித்தாந்த ஞான அனுபவச் செல்வரான சேக்கிழார், தம் பக்தி ஞான அநுபவத்தைத் தமது பாடல்களில் பரவலாகக் காட்டி நம்மை வழிப்படுத்தியுள்ளார். சிவனடியாரின் மெய்ப்பாடு இன்ன தன்மையது என்பதைத் தாமே அந்நிலையில் நின்று பாடியமை பத்திச் சுவை நனி சொட்டச் செய்கிறது.

"ஈசனையே பணிந்துருகி இன்பமிகக் களிப்பெய்திப்
பேசினவாய் தழுதழுப்பக் கண்ணீரின் பெருந்தாரை
மாசிலா நீறணிந்தங் கருவிதர மயிர்சிலிர்ப்பக்
கூசியே உடல்கம்பித் திநவார்மெய்க் குணமிக்கார்" ★

★ உலகில் எத்தனை மனிதரோ அத்தனை மதங்கள் உண்டு ★

# தைப்பூசம்

மனிதப்பிறவி எடுத்தவர்கள் ஆண்டுதோறும் கண்டு களிக்கவேண்டிய விழாக்கள் என்னும் சாறுகளுள் ஒருசில மிக முக்கியமானவை. அவற்றுள் சிவபெருமானுக்குரிய பெருவிழாக்களில் ஒருசிலவற்றை அவையவை நடைபெறும் மாதங்கள்தோறும் நிரைப்படுத்தித் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் பாடியருளுவர்.

திருமயிலாப்பூரில் வாழ்ந்த சிவநேயச்செல்வர் பெற்றெடுத்த மயிலனைய சாயலையுடைய பூம்பாவை அடுத்து வரப்போகின்ற விழாப்பொலிவுகள் காணாது போய்விட்டாளே என்று தந்தையாரின் பரிதாபநிலையில் உளங்கனிந்துருகிப் பாடியருளுவர். ''நேரிழையார் கொண்டாடும் தைப்பூசங் காணாதே போதியோ பூம்பாவாய்'' என்பது ஒரு தொடர். தைப்பூச விழா கபாலீச்சரத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றுவந்தது என்பர்.

கற்பகாம்பாள் சமேத கபாலீச்சரப் பெருமானைக் கண்டு தரிசிக்கும் பாக்கியம்பெற்ற திருநாவுக்கரசுநாயனார் 'கபாலியைக் கற்பகத்தைக் கண்ணாரக் கண்டேன் நானே' என்றுள்ளம் பூரித்துப் பாடியருளுவர். ''அண்ணலார் நல்விழாப் பொலிவுகண்டார்த்தல்'' கண்ணிலாம் பயன் என்று சேக்கிழார் சுவாமிகள் திருவிழாக்களின் சிறப்பினைப் போற்றுவர்.

அயனங்கள் இரண்டிற் சிறந்ததான உத்தராயனத்தில் வருகின்ற தைப்பூச நாள் மிகவுஞ் சிறந்தது. அதுவும் குருவாரமாய வியாழக்கிழமையோடு கூடிவருவதானால் வெகு சிறப்புப் பெறுவதாகும். பூரணை, பூசம், வியாழன் ஆகிய முச்சிறப்புக்களும் பொருந்திய முன்னொரு வேளையில் சிவபெருமான் தமது அதியற்புத ஆனந்தத் தாண்டவத்தை வெகு சிறப்பாக ஆடியருளினார்.

சிவபெருமானின் ஒப்பில்லாத திருநடனத்தைக் கண்டு தொழுத திருமால், அதனை மீள நினைத்தபோதில் புளகாங்கிதங்கொண்டு போற்றக்கண்ட ஆதிசேடன் தானும் அத்திருநடனத்தைக் கண்டு தொழத் தில்லைவனத்தில் பதஞ்சலியாய் இருந்து தவஞ்செய்தார். அவருக்கு அண்மையில் வியாக்கிரபாதர் என்னும் புலிக்கால் முனிவர் சரியைத்தொண்டுசெய்து தவஞ்செய்யவே, இருவர்தம் மனக்கருத்தை நிறைவேற்றும் வண்ணம் இறையவன் தம் திருநடனத்தைத் தில்லையிலே வரந்தந்தோம் (தம்தோம்) என்று ஆடியருளினார்.

இறைவன் ஆடியருளப்போகின்றாராம், ஆட்கொள்ளப் போகிறாராம் என்பது கேட்ட தில்லைமூவாயிரவர் முதலானோர் வந்து குவிந்து கூப்பிய கையோடு காத்திருந்தனர்.

தேவாதி தேவர்களும் முனிவர்களும், ஆகாச வாசிகளும் தில்லையிலே வந்து சேவித்து நிற்ப, பானுகம்பர் சங்கு ஒலிப்ப, வாணாசுரன் குடமுழா ஒலிப்ப, ஐவகைத் துந்துபிகள் ஒலிப்ப, மத்தியான வேளையிலே சித்தயோகத்திலே சிவபெருமான் சிவகாமி அம்மையாரோடு திருநிருத்தியம் செய்தருளினார்.

இந்த நடனத்தைக் கண்டவர்கள் உள்ளம் உருகி இது என்றென்றும் இங்கே நடைபெறுவதாக என வேண்டிக்கொண்டதற்கு இரங்கி இறைவன் தமக்கு இயல்பாக உள்ள பெருங்கருணையினாலே என்றும் ஆடிக்கொண்டே எழுந்தருளியுள்ளார். அவரின் திருநடனச் சிறப்பைச் சிதம்பரத்துவம், கோயிற்புராணம் முதலிய நூல்களும் சிதம்பர மும்மணிக்கோவை முதலிய பிரபந்தங்களும் அருமையாகக் கூறுகின்றன.

தேவார முதலிகள் மூவரும் சிதம்பரம் தொழுது திருநடனத்தைப் பாடியருளியுள்ளார்கள். மாணிக்கவாசக சுவாமிகள் முதலாய ஏனைய திருமுறைக் குரவர்களும் திவ்வியம் பழுக்கப் பாடியருளியுள்ளார்கள். இருதயத்தானமாய சிதம்பரத்தின் ஆட்டமே எமது இருதயத்தில் ''லப்டப்'' என ஒலிக்கின்றது.

---



## ஒளவை அருந்தமிழ்

★

### சிறந்தவை எவையெனச் சுருக்கமாகப் பாடியது

ஒளவையார் வாழ்ந்தகாலத்தில் வேறுபல புலவர்களும் அறிவாளிகளும் வாழ்ந்தார்கள். அவர்கள், ஒளவையாரின் அநுபவத்தில் கண்டவற்றை அறிந்து கொள்வதில் விருப்பம் உள்ளவராய் இருந்தார்கள். காட்சி, வீரம், வித்தை, உணவு என்பன பற்றிப் புலவர்கள் ஆராய்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். அவ்வழியால் ஒளவையார் போனபோது, அவரிடம் தாங்கள் பேசிக்கொண்டிருந்த விடயங்களைக் கூறினார்கள்.

ஒளவையார் அவர்களைப் பார்த்துச் சொன்னார். ''மனிதனுக்கு மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய புலன்கள் உள்ளன. இவற்றை ஐந்து புலன்கள் என்பார்கள்; மனிதன் ஐம்புலன்களையும் இங்கும் அங்கும் அலைய விடாமல் ஒருவழிப்படுத்தி ஒன்றை அறிதல் வேண்டும். அதுவே நல்ல காட்சியாகும். வீரன் என்று புகழத்தக்கவன் யாவன் என்றால், ஐம்புலன்களையும் அடக்கி ஒழுக்கநெறியிலே வாழ்பவனாவன். வித்தை என்னும் கல்வியை விரும்பிக் கற்கும் போது, எதனாலும் சோர்வுபடுதலாகாது; வறுமை, நோய், துன்பம் முதலியன சோர்வை உண்டாக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும். உணவு என்பது ஒருவன் பிறருக்குக் கைகட்டி வாய்பொத்திச் சேவகஞ் செய்து உழைத்துப் பெறுவது அல்ல. தன்னைப் பிறர் கூலிகொண்டு ஏவாமல் தான் சுதந்திரமாய் உழுது விதைத்து எடுத்துக்கொள்வதே சிறந்த உணவாகும்.

(போனகம் என்பது தானுழந்தட்டல்)

ஒன்றுகக் காண்பதே காட்சி புலனைந்தும்
வென்றான்றன் வீரமே வீரம் — ஒன்றானும்
சாகாமற் கற்பதே வித்தை தனைப்பிறர்
ஏவாம லுண்பதே யூண்.

---

★ சாசுவதம் என்றால் என்றுமுள்ள மெய்ப்பொருள் ★

## மணிப்புரி வாழ்வு மலர்க!

யாழ்ப்பாணத்து மாநகர சபையின் கிழக்கு எல்லைக்கு அப்பால், நல்லூர் கிராமச்சங்க எல்லையில் தொடுவதாய், நல்லூர்த் தொகுதியோ, யாழ்ப்பாணத் தொகுதியோ, என்று சொல்ல முடியாததாய், கொழும்புத்துறையைத் தபால் நிலையமாகக் கொண்டதாய், அரியாலையூரின் பெருநிலக்கிழாரின் உரிமையாய், நெய்தலும் முல்லையும் கலந்த நிலப்பரப்பாய்ப் பரந்து விரிந்து, தென்னையும் பனையும் செழித்து வளர்வதாய், ஏறக்குறைய எண்பது ஏக்கர் நிலப்பரப்பாயுள்ளது ஒரு குடியேற்றம். அது நிற்க,

யாழ்ப்பாணத்துப் பொதுசன நூல் நிலையம் இருந்தாற்போல முற்றவெளியில் முனியப்பர் கோயிலுக்கு முன் தோன்றியது அல்ல. இற்றைக்கு ஐம்பது ஆண்டுகளுக்கு முன் யாழ்ப்பாணத்து மாவட்ட நீதிமன்றத்தில் செக்கிரட்டரி என்னும் சக்கடத்தாராயிருந்தவர் அச்சுவேலியூரினரான அமரர் க. மு. செல்லப்பா அவர்கள். செல்லப்பா அவர்கள் கந்தமடத்தில் வீடொன்றை வாடகைக்கு எடுத்து வாழ்ந்து வந்த காலத்தில் *11-12-1933* ஆம் நாளில் யாழ்ப்பாணத்துக்கு ஒரு மத்திய இலவச தமிழ் வாசிகசாலையும் நூற்கழகமும் ஆரம்பிப்பதற்கு அபிமானிகளின் ஆதரவைத் திரட்டுவதற்கு அழைப்பு விடுத்தார்.

செல்லப்பா அவர்கள் விடுத்த அழைப்பையேற்று யாழ்ப்பாணத்துப் பெரியவர்கள் எல்லோரும் வரிசை வரிசையாய் வந்து சேர்ந்தார்கள். அவர்கள் வரவால் சங்கம் ஒன்று *9-6-1934* ஆம் நாள் உருவானபோது, நீதவான் குமாரசுவாமி அவர்கள் தலைவராகவும், அப்புக்காத்தர் அரியாலையூர் பொன்னம்பலம் அவர்களும் அச்சுவேலியூர் செல்லப்பா அவர்களும் செயலாளராகவும் தெரியப்பெற்றார்கள். இச்சங்கத்தில் யாழ்ப்பாணத்துப் பிரமுகர்களும் கல்லூரி அதிபர்களும் நிர்வாக சபையினராக இருந்தார்கள். கல்வி மந்திரியார் கன்னங்கரா அவர்கள் உட்பட மதஸ்தாபன அதிபர்கள் பலரும் நிர்வாகத்திலும் அங்கத்துவத்திலும் இருந்தார்கள்.

இத்தகைய புகழ்பூத்த சங்கம் ஆறுமாத காலத்தில் அரும்பணியாற்றி வளர்த்த நூலகத்தையும் வாசிகசாலையையும் அக்காலத்தில் நிலவிய யாழ்-நகர மாவட்ட சபையின் (Jaffna Urban District Council) பரிபாலனத்தில் ஒப்படைத்தல் வேண்டும் எனப் பிரேரித்தவர் மேற்படி சபையின் பிரதிநிதியாயிருந்த அரியாலையூர் சட்டத்தரணி R. சுப்பிரமணியம் அவர்களாவர். சட்டத்தரணி சுப்பிரமணியம் அவர்களின் மகத்தான சேவையைச் சபைத் தலைவர் ஆர். ஆர். நல்லையா அவர்கள் வெகுவாகப் பாராட்டியுள்ளார். நூல் நிலையம் *1935* ஆம் ஆண்டு முதல் நகரசபையின் பரிபாலனத்தில் நடைபெறலாயிற்று.

இத்தகைய புகழ்பூத்த சட்டத்தரணி அரியாலையூர் சுப்பிரமணியம் அவர்களுக்குச் சொந்தமான மணியம் தோட்டம் என்னும் பெருநிலப் பகுதியே மணிப்புரி என அன்னார் பெயரால் இன்று நிலவுகிறது. இந்நிலத்தில் குடியேறியுள்ள புலவர்கள், எழுத்தாளர்கள், சமூக சேவையாளர்கள் பலரும் நிலக்கிழார் சுப்பிரமணியம் அவர்களின் திருநாமத்தைப் பயபக்தியோடு உச்சரிக்கிறார்கள், நன்றி விசுவாசமுள்ளவராய் வாழ்கின்றார்கள். அபிவிருத்திப் பாதையில் அடியெடுத்து வைத்துள்ளார்கள்.

மணிப்புரி அபிவிருத்திச் சபையின் தலைவராயுள்ளவர் அந்தனிசில் என்னும் எழுத்தாளராவர். இன்னும் அனலை செழியன், கவிஞர் கந்தப்பன் முதலானோரும் அங்குக் குடியேறித் தங்கள் சகபாடிகள் வாழ்வை மலரச் செய்யப் பெருமுயற்சியெடுக்கிறார்கள்.

### மில்க்வைற் தொழிலதிபர் பங்கு

அன்று எப்பவோ நிலத்தைவிட்டுச் சென்ற அமரர் சுப்பிரமணியம் அவர்களுக்கு விசுவாசமுள்ளவராயுள்ள மணிப்புரி வாசிகள் சென்ற *3-1-82* ஞாயிறு வாரத்தில் மில்க்வைற் தொழிலதிபரை அங்கே வரவேற்றுப் பலவிதமான மரங்கள் செடிகள் விதைகள் நாற்றுக்கள் நடுவதற்குப் பெருமுயற்சி எடுத்தார்கள். இவ்வைபவத்தில் மாவட்ட அபிவிருத்திச் சபைப் பிரதிநிதி திரு. அழகையா அவர்களும், மாநகரசபைப் பிரதிநிதி திரு. தம்பு கந்தையா அவர்களும் சமுகமளித்துத் தொழிலதிபர் கனகராசா அவர்கள் அபிவிருத்திப் பாதையில் ஆற்றிவரும் பணியைப் பல கோணங்களில் ஆய்ந்து பாராட்டி ஊக்குவித்தார்கள். மில்க்வைற் தொழிலதிபர் தமது பேச்சில், குடியேற்ற வாசிகள் குடியொற்றுமையாய்ச் சுகத்தைப் பேணி நிலத்தைத் திருத்திக் கைத்தொழிலபிவிருத்தியில் கவனஞ் செய்து முன்னேறும் வாய்ப்பை விளக்கிப்பேசி வாழ்வு மலர வாழ்த்தினார். மணிப்புரி வாழ்வு மண்ணில் மலர்க!

---

## அங்கும் இங்கும்

புனிதமான கங்கையில் நீராடி நம் அழுக்கைப் போக்குகிறோம். அதனால் கங்கை அசுத்தம் அடைவதில்லை. நாங்கள் செய்த குற்றங்களைக் குருவிடம் கூறி மன்னிப்புப் பெறுவதால் நமக்குத் திருத்தம் உண்டாகிறது.

வசிட்டரும் அருந்ததியும் என வழங்கும் நட்சத்திரங்கள் உலகத்துக்குப் பொதுவானவை. அவையிரண்டும் நிலைத்துள்ள தூரம் என்றும் கூடிக்குறையாமல் அவை பெருவெளியில் அமைந்துள்ளன. நிலையிற் பிரியாது கூடி நிற்கும் அவை காதலிற் பிரியாது, கவவுக்கை நெகிழாது வாழவேண்டிய தம்பதிகளுக்கு வாழ்வின் இரகசியத்தை விளக்குவன.

கருங்கல்லான அம்மி இறுக்கமானது நெகிழ்ந்து கொடுக்க மாட்டாதது. இன்ப துன்பங்களில் மனவுறுதி பெற்று வாழவேண்டிய தம்பதிகள் திருமண நாளில் அம்மிக்கல்லை மிதித்து உறுதி என்றால் என்ன என்று அறியவைக்கிறார் குருக்கள்.

முரசுகள் பலவகைப்படும். தோல்வாத்தியங்களும் முரசுகள் இனத்தவை. பறையடித்துச் செய்திகள் சொல்லவும் முரசு பயன்பட்டது. முரசு அடிக்கக்கேட்ட இளைஞர்கள் மன்னனின் படை நிரைக்கு ஓடிச் சென்றார்கள். எல்லா முரசுகளிலும் ஒருவர் கொடுத்தார் என ஒலிக்கும் கொடை முரசு நெடுந் தூரம் கேட்கும்.

---

★ இறைவன் எல்லோரிடமும் மனச்சாட்சியாய் உள்ளார் ★



# வாழ வைக்கும் வாழை

மா, பலா, வாழை என்னும் முக்கனிகளுள் வாழை வருடம் முழுவதும் பயன்தருவதோடு விரைவிலும் பயன் தருவது. வாழையைப் பயிர் செய்வதும் சுலபம். அது களர் நிலம், உவர் நிலம் தவிர்ந்த மற்றைய நிலங்களில் பயன் தருவது. மற்றைய நிலங்களில் செம்மண், இரு வாட்டி என்னும் நிலங்களில் வாழை நிரம்பிய பயன் தருவது.

வாழையில் ஏறக்குறைய எண்பது இனங்கள் உள் ளன. அவற்றுள் பூவன் வாழை, மொந்தன் வாழை என்பன வரட்சியைத் தாங்குந்தன்மையன. நேந்திரம் என்பது சிறந்த இனமாகும். றெபெஸ்ரா என்னும் இனம் வெளிநாட்டார் அதிகமாக விரும்பும் இனமாகும். எனவே அது ஏற்றுமதிக்கான இனம் என்பர்.

வாழை நடுவதற்குத் தை, மாசி, ஆடி மாதங்கள் ஏற்ற காலம் என்பதை அநுபவசாலிகள் நன்கறிவர். தை வாழையைத் தரையிற் போடு என்றொரு பழ மொழி வழங்குவதுண்டு. நடுவதற்கு நீளமான இலைகளை யுடைய குட்டிகள் நல்லன. அவற்றை நடுவதற்கான குழிகள் ஒன்றரை அடி ஆழம் அகலம் நீளம் அமைதல் நல்லது. வாழைக்கு வாழை இருக்க வேண்டிய இடை வெளி, அவை உயரமானவையாயின் ஏழு அடியும், குள்ளமானவையாயின் ஐந்து அடியும் இருந்தாற்போது மானதென்ப. இவ்வாறாக ஏக்கருக்கு 900 முதல் 1200 வாழைகளை நட்டு உண்டாக்கலாம் என்பர். வெப்ப மண்டலத்தில் பயன் தரக்கூடிய பயிர்களுள் வாழை முதன்மையானது. அன்றிக் குறைந்த நிலப்பரப்பிற் கூடிய பயனையும் அது தரவல்லது.

தமிழ் நாட்டில் பூவன், ரஸ்தாளி, மொந்தன், நேத்திரன் இனங்கள் நல்ல பயன் தரும் வகையில் எங் கள் பிரதேசங்களிலும் பயன் தரும். இவற்றைப் பற்றிய விபரங்களை இந்திய வானொலி அடிக்கடி விளக்குகின்றன. எம்மவர் அவற்றைக் கேட்டுப் பெரும் பயன் அடைய லாம். அன்றி கோயம்புத்தூரிலிருந்து வெளிவரும் ''வளரும் வேளாண்மை'' என்னும் மாதச் செய்திப் புத்தகம் பெரிய விடயங்களை விளக்குகின்றது.

வாழைச் செய்கையில் நம்மவர் கவனிக்க வேண்டிய முதற்படி வாழைக் குலையின் தரத்தை வெகுவாக உயர்த் துதலாகும். அதனால் கூடிய விலையைப் பெறலாம். குலை யின் தரத்தை உயர்த்துவதற்கு விவசாய நிபுணர் கண்டு பிடித்த வழி என்னவென்றால் 25 பி பி எம் என்னும் மருந்தை வாங்கி வாழைக்குலையில் தெளிப்பதாகும். குலையின் கடைசிச் சீப்பு வந்தபின் தெளித்தல் வேண்டும். இதனால் பழத்தின் நீளமும் எடையும் திண்மமும் அதிகரிப் பதோடு விரைவில் பழுக்கவும் வாய்ப்பாகும். எனவே நாம் வாழ வாழை வைப்போமாக.

## எள் சாகுபடி

வைத்தியனுக்குக் கொடுப்பதை எண்ணெய் வணி கனுக்குக் கொடு என்னும் பொருள் நிரம்பிய பழமொழி தமிழ் நாட்டில் பிரபலிக்கமுள்ளது. யாழ்ப்பாணத்தில் காரைநகர், அராலி, வட்டுக்கோட்டை, நவாலி, ஆனைக் கோட்டை, பருத்தித்துறை முதலிய ஊர்களில் எள்ளின் அருமையை நன்றாக அறிவார்கள். தங்கள் வயலில் எல்லோரும் எள் விதைத்துப் பயனடைந்து வந்தார் கள்.

புரதச்சத்து மிகுந்த எள் எண்ணிறந்த வழிகளில் எமக்குப் பிரயோசனந் தருவது. உணவாகவும், எண்ணெ யாகவும், கால்நடைகளுக்குப் புண்ணாக்காகவும் பயன் தரும் ,எள் உற்பத்தித் துறையில் வாசனைத் தைலம், சவர்க்காரம் முதலியன செய்யப் பயன் தருவதாகும்.

வளரும் பிள்ளைகளுக்கு ஒரு நாளில் எண்ணெய் பூசி மறுநாள் நீராட்டி உருப்படியாக்கிய நாகரிகம் தமிழ் நாகரிகம். எண்ணெயும் தண்ணீரும் எம்மை வளர்ப்பவை. எள்ளுப்பாகு போன்ற உள்ளூர் உணவு எந்த உலகத்தி லும் கிடையாது. எங்கள் பனங்கட்டியும் எள்ளும் எம்மை வளர்க்க நாம் எள் விதைப்போம். விதைப்போம். விளை வைக் கண்டு களிப்போம். களிப்போம்.

## நாணயமானவர்கள்


### நாணயமாணவர்கள்

தமிழ் நாட்டிலே திண்டுக்கல் பகுதியில் சித்தையன் கோட்டை உயர்நிலைப் பாடசாலையில் மாணுக்கர்களுக் கான கடையொன்றில் அவர்களுக்கு வேண்டிய பண்டங் கள் இருக்கின்றனவாம். விற்பனை செய்வதற்கு எவருமே யில்லாத கடையில் விலை விபரம் மாத்திரம் சுவரில் ஒட்டப்பட்டிருக்கிறதாம். மாணுக்கர் வெகு நாகரிகமாகத் தமக்குத் தேவையானவற்றை எடுத்துக்கொண்டு உரிய விலையைப் பெட்டியில் இட்டுப் போகிறார்களாம்.

படிப்பறை: இயலுமாயின் உங்கள் பிராத்தனை அறையும் படிப்பறையும் வேறாய் இருக்கவேண்டும். அன்றேல், ஓர் அறையில் ஒரு மூலையை இக் கருமத்துக்கு ஒதுக்குக. இத னால் உங்கள் மனக்குவிவாற்றல் அதிகரிக்கும்.

— சுவாமி சிவானந்தர்

★ தொண்டு மனப்பான்மை தாஸ்ய பாவம் எனப்படும் ★



## பஞ்சதந்திரம்

அதிகமாகப் பேசாமல் இதமாகவும் மிதமாகவும் நன்ருகயோசித்தும் அலசியாராய்ந்தும் பேசுகிறவனுல் எல்லாக் காரியங்களையும் சாதிக்க முடியும்.

ஒரு அரசனை நேரில் பார்க்காவிட்டாலும் அவனுடைய மந்திரியையோ தூதுவனையோ பார்த்து அரசன் எப்படிப் பட்டவன் என்று அறிந்துகொள்ளலாம்.

இலக்கணப் பிழையற்ற பேச்சும், சாதுக்களின் மதிப்பைப் பெற்ற பேச்சும், எல்லோருக்கும் சம்மதமான பேச்சும் அரசன் பேசிய பேச்சுக்குச் சமானம்.

காரியத்திற்காகப் பேசவேண்டும். பலனளிக்கக் கூடியதான முறையில் பேசவேண்டும் நிறைவேற்றக் கூடியதாகப் பேசவேண்டும் சுருக்கமாகப் பேசவேண்டும்.

வானத்தை வில்லாகவளைப்போம். மண்ணைக் கயிருகத் திரிப்போம். மண்ணுணிப்பாம்பை மலைப்பாம்பாக மாற்றுவோம். அண்டங்காகத்தை அரசாளவைப்போம். மண்ணுங்கட்டிக்குத் தங்கத்தின் உயர்வு தருவோம் என்றெல்லாம் பசப்புகிறவர்களை நம்பினுல் நடுத்தெருவில் தயங்கவேண்டி வரும்.

## சிங்கப்பூரிற் சைவம்

தென்கிழக்கு நாடுகளில் ஒன்ருன சிங்கப்பூர் மிகவுஞ் சிறியதொரு தீவு. ஆனுல் அது பொருளாதாரச் சிக்கலின்றி நிலவுவதோடு இன மதப் பிரச்சினைகள் இல்லாத நாடு. முற்காலத்தில் யாழ்ப்பாணத்தவர் பலர் அங்குச் சென்று பெரும் உத்தியோகங்களிலமர்ந்து போதியளவு செல்வாக்கோடு வாழ்ந்து குறைவற்ற உபகாரச் சம்பளத்தோடு இங்கு மீண்டனர். இன்றும் சிங்கப்பூரில் தமிழும் சைவமும் நல்ல முறையில் வளருகின்றன.

சிங்கப்பூரில் சிலோன் வீதியிலுள்ள செண்பக விநாயகர் ஆலய பரிபாலன சபையார் அங்குச் சைவம் வளர்ப்பதற்கு வேண்டிய நூல்கள் பலவற்றைத் தொழிலதிபர் கனகராசா அவர்களிடம் நன்றியறிதலோடு பெற்று பணி புரிகின்ருர்கள்.

## கிராமாபிவிருத்தி

தெல்லிப்பழை கிராமாபிவிருத்திச் சபை சித்தம் சபாரத்தினம் அவர்களின் தலைமையில் நல்ல முறையிற் பன்முகப் பணி புரிகின்றதைப் பாராட்டுகிருேம்.

## தமிழ்ச் செல்வம்

தமிழர் கல்விச் செல்வம் பொருட் செல்வம், குழந்தைச் செல்வம், முதலியவற்றையே பெருஞ் செல்வமாக மதித்தனர். நிலச் செல்வம் நிலந்தரு திருவென வேறு பல செல்வங்களையும் தருவது. மனைக்குச் செல்வமான மக்களுக்கு அடுத்தாற்போல் மாடும் செல்வமாகும். செல்வத்தை திருவென்றும் நிதியென்றும் வழங்கிய தமிழர் நிதியின் பெருக்கத்தை சங்கநிதி, பதுமநிதி என்றெல்லாம் மட்டிட்டனர். அவை பெரும் அளவைக் குறிப்பன. அவை மிலியன் (பத்துலட்சம்) என்றும் எண்ணிலும் பெரியவை. முற்காலத்துச் செல்வர்கள் பலவிதமான தானங்களைச் செய்ததோடு துலாபாரதானமும் செய்தார்கள். அது ஒரு தட்டில் தானும் மறுதட்டில் பொன்னுமாக நிறுத்துத் தன் நிறையுள்ள பொன்னைத் தானமாக வழங்குதல். தில்லை என்னும் கள்ளிச்செடி வளர்ந்த காட்டில் சிதம்பராலயம் அமைத்துக் கூரைக்குப் பொன்ருல் செய்த தகடு வேய்ந்து பொன்னம்பலம் சமைத்தவரும் செல்வர்களே. கம்பரை ஆதரித்த சடையப்ப வள்ளலும் செல்வனே.

## சைவம்

மிகப் பழைய காலத்தில் தமிழ் நாட்டில் சிறப்புற்றிருந்த சமயம் சைவம். சைவக் கோயில்கள் நகர் என்றும் கோட்டம் என்றும் பெயர் பெற்றிருந்தன. பரிபாடல், அகநாநூறு, புறநாநூறு, திருமுருகாற்றுப்படை, பெரும்பாணுற்றுப்படை, மலைபடுகடாம் முதலிய சங்க நூல்களில் சிவன் சம்பந்தமான சைவசமயக் கருத்துக்கள் வந்துள்ளன.

தாய்மார் தங்கள் குழந்தைகளை இளமையிலேயே கோயிலில் வழிபடப் பழக்கினுர்கள் என்றும், கோயில் வீதியில் குடையைச் சரித்து வணங்கியே மன்னர்கள் உலாப் போதல் வேண்டும் என்றும் செய்திகள் உண்டு. கோயிலைத் தேவகுலம் எனவும் வழங்கினர்.

சங்ககாலப் புலவர்களுள் திருநீற்றை நிறையப் பூசிய புலவரொருவர் வெண்பூதியார் எனப் பெயர் பெற்றனர். உருத்திரங்கண்ணனுர் என்பார் உருத்திராட்சம் அணிந்து சிறப்புப் பெற்ருர் என்பர்.

சங்கநூல்களில் ஒன்ருன நற்றிணையில் வரும் கடவுள் வாழ்த்துச் செய்யுளில் கடவுளின் இயல்பு கூறப் பெறுகிறது. இறைவன் எல்லாவற்றையும் கடந்து நிற்பவர். எல்லாப் பொருள்களிலும் உறைந்து உள்ளும் நிற்பவர். எல்லாவற்றையும் கடந்து நிற்றலை சர்வவியாபி என்பர். எல்லாவற்றையும் தொட்டுள்ள நிலையினை சர்வாந்தர்யாமி என்பர். ''இயன்ற எல்லாம் பயின்று அகத்தடங்கிய வேதமுதல்வன்'' என்பது கடவுள் வாழ்த்து.

அகிம்சை: யாரொருவரையும் பேச்சால் அல்லது சிந்தனையாற்கூட புண்படுத்தாதீர்கள். யாரொருவரையும்பற்றி ஒருபோதும் இழிவாக எண்ணுதீர்கள். அனைவரிலும் நன்மையைக் காண்க. இது பொதுச் சகோதரத்துவத்தையும் சகிப்பையும் பேணும்.

— சுவாமி சிவானந்தர்

★ இறைவனைத் தாயாகக் கருதல் வாத்ஸல்ய பாவம் எனப்படும் ★



# ஆடிக்கொண்டார்

அன்று திருவாதிரைத் திருநாள். திருவெம்பாவை நாட்களின் சிகரம்போல் ஒளிவீசிய நாள். அதிகாலையிலேயே ஆலயங்கள் யாவும் மந்திரவோசையும், திருமுறையோசையும், மணிவாசகர் பூசையும், மன்றுளாடும் பெருமான் பூசையும் வாத்தியவொலியும் மணியோசையும் நிறைந்த நாள். குளிரையும் பொருட்படுத்தாது மக்கள் நீராடித் தூய்மையாக அந்தச் சிவாலயத்தையடைந்து பயபக்தியுடன் பூசைச்சிறப்பைக்கண்டு கூடுமன்பில் கும்பிட்டு நின்றனர். ஆண்கள் ஒருபக்கமாகவும் பெண்கள் ஒருபக்கமாகவும் தெற்குநோக்கிய வசந்தமண்டபத்தில் எழுந்தருளிய நடராசமூர்த்தியின் திருநடனத்தைக் கண்டுநின்றனர். நடராசப்பெருமானின் திருநடனத்திற்குத் தாளம்போட்ட தையல், அவருடன் ஆடியொதுங்கிய தையல், நாணிக்கோணி இடப்பக்கத்தில் ஒதுங்கி நின்று அவர் ஆட்டத்தைக் கீழ்ப்பார்வையில் பார்த்தபடி நின்றாள். அவரும் ஆடியவண்ணம் அற்புதமாக விளங்கினார்.

வைகறை நீங்கிக் காலைப்பொழுது நீங்கி நண்பகலாவதற்கு நேரமாயிற்று. நடராசப்பெருமான் வசந்தமண்டபத்தை விட்டு எழுந்தருளி உட்பிராகாரத்தை வலம் வந்து வடக்குப் பிராகாரத்தில் தீர்த்தச் சிறப்பைக் கண்டருளினார். அத்திரதேவர் அருமையாக அபிடேகஞ் செய்யப்பெற்றார். அத்திரதேவரின் அமைப்பே அற்புதமானது. முத்தலைச் சூலத்தோடு சந்திரசேகர மூர்த்தமும் கொண்டவராயமைந்த தேவர் அபிடேகத் திரவியங்கள் பொழியத் தீர்த்தமாடினார். தீர்த்தச் சிறப்பின் திருவருளாமெனக் குருக்கள்மார் அங்குக் கூடிய அன்பர்கள் அடியவர்களுக்கு விபூதி, சந்தனம், தீர்த்தம், மலர்இதழ் யாவற்றையும் குறைவறக் கொடுத்தார்கள்.

நடராசப்பெருமான் கிழக்குநோக்கி நின்றாடியபோது இடப்பாகத்தில் அம்பிகையும் வலப்பாகத்தில் மணிவாசகரும் கூடநின்று திருக்கண் சாத்தியருளினார்கள். மூவரும் மெல்ல மெல்ல வெளியில் காத்துநின்றவர்கள் கண்கள் நீர் ததும்பக் கைகள் தலைமேற் குவிய அரோகரா என்னும் ஓசை அலையலையாக ஒலிப்பப் பெருவீதிக்கு எழுந்தருளினார்கள்.

நடராசப்பெருமான் அன்று ஆடியருளிய மெய்ஞ்ஞானக் கூத்தை இன்று விஞ்ஞான உலகில் ஆடிக்காண்பித்த விந்தையே விந்தை. மோட்டார் வண்டியொன்றில் சில யந்திர இணைப்புக்கள். ஒரு யந்திரம் மேலே உயர்த்திக் கீழே தாழ்த்துந்தன்மையினது. மற்றொன்று பக்கங்களுக்குத் திருப்பித் திருப்பித் திசைகளை நோக்கச் செய்வது. இத்தகைய அமைப்புக்கள் பொருந்திய பீடத்தில் நடராசப்பெருமான் ஆரோகணித்ததுதான் தாமதம் அங்கு ஆயத்தமாக நின்ற திருத்தொண்டர்களுள் சிலர் வாத்தியங்களும் கைத்தாளங்களும் கலகலப்பாய் ஒருமுகமாக ஒலிப்ப ஆடிக்கொண்டார் என்று அட்சரசுத்தியாகப் பாடியதுதான் தாமதம் நடராசப்பெருமான் துள்ளித் துள்ளி ஆடினாரே. ஆட்கொண்டாரே. ஆடியவரின் அசைவுகளை முன்னேநின்று பார்த்தோம், பின்னேநின்று பார்த்தோம், இடப்பக்கமாய் நின்று பார்த்தோம், வலப்பக்கமாக நின்று பார்த்தோம். அற்புதம்! அற்புதம்!

நடராசப்பெருமான் ஆட்டத்தின்போது அவர்தம் திருநிலைச் சேவடிச் சிலம்பு ஒலித்தது. அவர்தம் திருக்கரத்து உடுக்கை ஆர்த்தது. அவர்தம் செங்கண் பலவாய திருக்குறிப்புக்களை விளக்கின. அவரின் திருச்சடை எல்லாத்திசைகளையும் நோக்கி அசையவும் அவரணிந்திருந்த பாம்புகள் ஆடிக் குலுங்கவும் அவர் ஆடியருளினார். வரம் தந்தோம் என அவர் குறிப்பாயுணர்த்தி ஆடினார். அவர் ஆடலை நேர்முக வர்ணனை செய்தார்கள் எனத்தக்க முறையில் பத்தி சிரத்தையோடு தொண்டர்கள் கைத்தாளம் கலந்தொலிப்பமிடற்றிசை உச்சத்திற் பாடினார்கள். இவ்வளவும் பூலோகத்தில் சிவபூமியென்னும் இலங்கையில் வடபால் வடமராட்சியில் வல்லுவெட்டித்துறையிலேதான்.

# தென்னந்தோப்பில் பனைமரம்

இலங்கையில் தென்னந் தோட்டங்களில் பனை மரங்கள் வளர்ந்தால் தென்னைக்குரிய மானியம் கிடையாது என்று யாரோ ஒருவர் சொன்னார். இதைக்கேட்டு வருந்திய சட்டத்தரணி திரு. க. நடேசன் அவர்கள் பனைச்சபை இயக்குநரும் பனையபிவிருத்தி முன்னோடியுமான மில்க்வைற் தொழிலதிபருக்கு முறையிட்டார். மில்க்வைற் தொழிலதிபர் உடனடியாகத் தமது பனம் பொருள் அபிவிருத்திச் சபை முதல்வருக்கு எழுதிப் பெற்ற தகவலில் ''ஏக்கர் ஒன்றில் பதினாறு பனைகள் வளரலாம்'' என்பதை எழுத்தில் பெற்றுள்ளார். எனவே தென்னந்தோட்டச் சொந்தக்காரர் பனைகளைத் தறியாதிருக்குமாறு தாழ்மையாகக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

## பாணிப் பனாட்டு

எல்லோருக்கும் எளிதில் சுத்தமான பாணிப் பனாட்டு கிடைக்கும். பனம் பொருள் அபிவிருத்திச் சபையினர் 250 கிராம் எடைகொண்ட பாணிப் பனாட்டைச் சுகாதாரமான முறையில் பெட்டியில் அடைத்துக் கற்பகத் திறப்பு விழாவில் விற்பனை செய்வார்கள். இதனைப் பிரேரித்து ஊக்கப்படுத்திய மில்க்வைற் தொழிலதிபருக்கு நன்றி கூறித் தகவல் தந்துள்ளார்கள்.

பெறுமதி வாய்ந்த பரிசுகளைப் பெற
மில்க்வைற் சவர்க்கார மேலுறைகளைச்
சேகரியுங்கள்.

**Collect Milk White Soap Wrappers**
**For Valuable Gifts**

# சிதம்பரம் போகாமல் சிதம்பரேசனைக் காணலாம்

சிதம்பரம் போகாமல் இருப்பேனோ இந்த ஜென்மத்தை வீணாகக் கழிப்பேனோ என்று திருநாளைப் போவார் பக்தி பரவசத்தில் பண்டொருநாள் பிதற்றினார். இன்று சிதம்பரம் எங்கே, நாம் எங்கே. இங்கே இலங்கையிலிருந்து கொண்டே தொலைநோக்கித் திரையில் சிவபெருமான் திருநடனத்தைத் காணக்கூடிய வரப்பிரசாதம் வரப்போகிறது ஐயே. அது வரட்டுக்கும்.

சிதம்பர தரிசனத்தை ஈழநாட்டிலே காண்பதற்குக் காரைநகர் வாசிகள் எப்பவோ வசதி செய்துவிட்டார்கள். அவர்களுக்குச் சிதம்பரம் மிக அண்மையில் உள்ளது. அவர்தம் உள்ளத்திலும் உள்ளது, உறைந்தது. இல்லாவிட்டால் சிதம்பரத்தின் விழாவமைப்பை அப்படியே இங்கே கொண்டிருக்கமாட்டார்கள்.

ஈழத்துச் சிதம்பரத்திற்குத் தலபுராணம் இல்லாக் குறை தீரப் புராணமும் எழுந்துள்ளது. காரைநகர் மணிவாசகர் மன்றம் திருவாசகத்தில் மட்டிலாப் பற்றுக் கொண்டு ஆண்டுதோறும் எழுச்சி விழா எடுத்து வருகிறது. தமிழ் நாட்டு நல்லறிஞர்கள் பலர் ஈண்டு வருகை புரிந்து சொற்பெருக்காற்றி வருகிறார்கள். பக்திவலையிற் படுமியல்பினரான காரைநகர் மக்களின் உளப்பண்பாடு உயர்ந்தது.

கப்பிகள், மிண்டிகள், இயந்திரங்கள் மலிந்த இக்காலத்தில் அந்தக் காரைதீவு மனோவலிமை படைத்த மகான் பெரிய மரங்களையே வேரோடு பெயர்த்தெடுத்துக் கோயில் வீதியெங்கும் ஆழக்குழி வெட்டி அற்புதமாக ஈரத்தோடு ஈரநெஞ்சுடன் நாட்டியுள்ளார். எம்பிராட்டியின் திருவருள் கிடைக்குமாயின் இப்பாரிய மரங்கள் கோயில் வீதியை நிழல் செய்து குளிரச் செய்யும் என்று கூறவும் வேண்டுமோ?

அன்று மணிவாசகர் மடத்தில் ஆயிரவராக அன்ன பானாதிகளுக்கு அண்மியிருந்த அடியார்களுக்கு வயிற்றுக்கு ஈவதன்முன் செவிகுளிர இன்னமுதம் பாலித்தவர் திருமுறை வல்லார் சங்கீத பூஷணம் சங்கீத வித்தியாதரிசி பொன்னுலை கணபதிப்பிள்ளை அவர்களாவர்.

கணபதிப்பிள்ளை அவர்கள் திருமுறையோதியதோடு, திருக்கோயிலை மையமாகக் கொண்டு பொதுமக்கள் செய்யக் கூடிய சிவப்பணி, சமூகப்பணி, பொதுப்பணி என்பன பற்றி மில்க்வைற் தொழிலதிபர் வெளியிட்ட இந்து சமய மன்றம் என்னும் சுவடியை அட்சரம் தவறாமல் அங்கிருந்தவர்களுக்கு வாசித்து விளக்கி மனப்பதிவு செய்தமை மகத்தான பணியாயிற்று.

தில்லைவாழ் அந்தணர்கள் தீட்சதர்கள் வழியில் சிவார்ச்சனை செய்யும் குருக்கள்மாருக்குக் காரைநகரிற் குறைவேயில்லை. அந்தணரில் மேம்பட்ட சிலர் பண்டிதர்களாயும் புலவர்களாயும் பள்ளியாசிரியராயிருந்து கொண்டே ஆலய சேவையும் செய்கிறார்கள்.

அறுபத்து மூவர் வழியைப் பின்பற்றிக் குருலிங்க சங்கம வழிபாட்டில் பழகிய பழவடியார்கள் காரைநகரில் பலரிருக்கிறார்கள். பட்டணத்து நாகரிகம் அங்கே பரவியுள்ள போதிலும் பாரம்பரியம் மாறாமல் நிலவுகிறது. அன்னதான மடங்கள் சோம்பலை வளர்க்காமல் அவ்வப்போது வரும் அடியார்களை வாருங்கள் எனவழைத்து வரிசையறிந்து மகேஸ்வர பூசை செய்கிறார்கள். மணிவாசக மடத்தைவிட மகேஸ்வர பூசையில் மற்றுமொரு மடம் வாருங்கள் என வரவேற்கிறது.

வெண்ணிறப் புடைவை விபூதி உருத்திராக்கம், குளிர்மையான பார்வை புன்சிரிப்பு குவிந்த கரங்கள். இத்தனையும் பொருந்திய இந்த உத்தமி மங்கையர்க்கரசியாரா, மாண்புடைய புனிதவதியாரா, திருவருள் நிறைந்த திலகவதியாரா, மூவரும் ஒருவராக முறுகி வளர்ந்த சிவபக்தையா? ஓகோ! இவர் அமைத்த மடமும் சிவ ஆஸ்ரமம் தானே.

தொழிலதிபர் கனகராசா அவர்களும் சிவப்பணி செய்கிறார்தான். இவரைக் கண்ணீர் வடிக்கச் செய்த காரைநகர் வாசிகளின் ஒரு பணி மழை நீரைத் தேக்கும் பணி. மழை நீரைக் குளமாக்கும் பணி ஒன்று. அங்குள்ள மடத்தில் மழைநீரைப் பொழியவிட்டுக் கிணறு செய்து குடிநீராக்குகின்றார்கள். உள்ள பொழுதில் ஈட்டிச் சேர்த்து இல்லாத பொழுதில் உண்டு மகிழும் எறும்பினத்திடம் காரைநகர் வாசிகள் நீரைத்தேக்கப் பயின்றார்கள் போலும்.

மரக்கன்றுகளையும் தென்னம்பிள்ளைகளையும் விதைகளையும் வேர்களையும் எளிதிற் கொண்டுதிரிந்து மரம் நாட்டும் பணியை மேற்கொண்ட மில்க்வைற் தொழிலதிபரின் விசர்க்குணம் காரைநகரில் ஒருவரை வெகுவாகப் பற்றிக் கொண்டது. அவர் செய்தவேலை பகீரதப் பிரயத்தனமா இராசராச சோழனின் தஞ்சாவூர்க் கோபுரப்பணியா என்று சொல்ல முடியாது.

இவ்வளவு சிறப்புக்களும் ஒருபுறமாக மறுபுறம் ஓங்கியுயர்ந்த பனைமரக் கூடல்களுக்கூடாக இறைவனுந் தேவியும் பரிவார மூர்த்தங்களும் ஐம்பெருந் தேர்களில் ஆரோகணித்துப் பக்தர்கள் கூடிப் பலவிதமாகப் பாடியாட எழுந்தருளி வந்தருள்புரிந்தமையாகும். சிதம்பரம் போகாமல் சிதம்பரேசனையும் சிவகாமித் தாயாரையும் கண்டு வணங்கியருள் பெறும் கருத்துள்ளவர்கள் அடுத்த திருவெம்பாவை நாளிற் கட்டாயம் காரைநகருக்குப் போங்கள். தொண்டுள்ளம் கொண்ட மினிபஸ் சேவையாளர்கள் உங்களை இந்த ஆண்டிற் செய்தமை போல இலவசமாகக் கொண்டு சென்று, மீண்டும் கொண்டு வந்து சேர்ப்பார்கள்.

---

## தமிழன் பெருமிதம்

தமிழன் என்றொரு இனத்தவன் மிகப் பழைய நாகரிகம் வாய்ந்தவன். அவன் இன்பமும் பொருளும் எவ்வளவுதான் கிடைப்பினும் பழியொடு வருவனவாய செயல்களை ஒருபோதும் செய்ததில்லை.

பெருமிதத்துடன் வாழ்ந்த தமிழன் சான்றோர் பழிக்கும் செயல்களைச் செய்வதில்லை. செயல்கள் தூய்மையாயிருந்தன. தமிழனுக்குப் பெருமிதம் கொடுத்தவை கல்வி, தறுகண், புகழ், கொடை என்பனவும் பிறவுமாம்.

---

★ ஆத்மசாதகன் சித்த சுத்திக்காகவே கருமஞ் செய்வான் ★

## Great Sayings

1. Light is the task when many share the toil.
2. In youth and beauty wisdom is but rare.
3. Labour conquers all things.
4. No task is too steep for human wit.
5. Whatever advice you give, be short.
6. Well begun is half done.
7. The great end of life is action.
8. Caution is the eldest child of wisdom.
9. A Creditor is worse than a master.
10. All authority belongs to the people.
11. The pen is the tongue of the mind.
12. Honour is dearer than life.
13. He that gives quickly gives twice.
14. Idleness is the holiday of fools.
15. Laws are dumb in the midst of Arms.

## பேசித்தான் ஆவதுண்டோ?

''மாசற்றார் மனத்துள்ளானை வணங்கி நாம் இருப்பதல்லால் பேசித்தான் ஆவதுண்டோ பேதை நெஞ்சே'' என்னும் பொருளில் ஆழ்வார் ஒருவர் அருளியுள்ளார். அண்மையில் இந்தியாவிலிருந்து வந்த கண்டி மாதாஜி என்னும் துறவியார் உடுவில் கிழக்கிலுள்ள சச்சிதானந்த சிறுவர் சங்கத்தைப் பார்த்துப் பெருமையுற்றார். சிறுமியரை உருவாக்கி வரும் ஆசிரியை சி. இலக்குமி அமைதியாகத் தொண்டு செய்கிறார். சங்கத்தார் மில்க்வைற் தொழிலதிபரைப் பணி செய்யப் பணிந்துள்ள அமைதியை மாதாஜி வாழ்த்தினார். தாம் பிரசங்கஞ் செய்ய வரவில்லை. எல்லோரையும் பார்த்துப்போக வந்தேன் என்று கூறியமை ஓரளவுக்குச் சுகனின் அமைதியாகும்.

## சிவம் பெருக்கும் அமெரிக்கர்

சென்ற நூற்றாண்டில், வட்டுக்கோட்டை மூலம், வைமன், நெவின்ஸ், வின்ஸ்லோ, போட், கரோல், பிறவுண் முதலிய பெயர்களை யாழ்ப்பாணத்தில் நிலவச் செய்த அமெரிக்கர், இந்த நூற்றாண்டில் அண்மையில் அளவெட்டி மூலம் ஈசன் கதிர், அரன்சேந்தன், கிரியாகரன், முருக நல்லூரான், மார்க்கண்டேயன், சோதிசேந்தன், ஆதி அழகன், கந்தஅரன் பழநிகுமரன் முதலாய ஆண் பாற் பெயர்களையும் சிவகுமாரி, காளி, வள்ளி, சாவித்திரி, வாசுகி முதலாய பெண்பாற் பெயர்களையும் தழுவிக் கொண்டு வாழும் வகையில் சிவம் பெருக்கி வாழுகின்றார்கள். சைவம் கமழும் இத்திரு நாமங்கள் வெறும் புனை பெயர்களல்ல. இவை அவர்களின் பாஸ்ற்போட் என்னும் கடவுச் சீட்டுகளிலும் பதியப் பெற்ற கடவுட் பெயர்களாகும் என்று ஸ்ரீ சுப்பிரமுனிய 'சுவாமிகள் கூறினார்கள். இவர் யாழ்ப்பாணத்து யோகசுவாமிகளின் சீடராவர். இன்று அமெரிக்க மாநிலங்களில் சிவாலயங்கள் அமைத்துச் சிவநடனத்தின் தத்துவத்தை உணர்ந்து உணர்த்திப் பரப்பிப் பணி செய்யும் இவர்களுக்கு ஒரு கும்பிடு.

## நேதாஜி பெயரால் பாலர் பாடசாலை

கொக்குவில் நேதாஜி சனசமூக நிலையத்தார் 23-1-82 சனிக்கிழமை மாலை பாலர் பாடசாலை ஒன்றை ஆரம்பித்துப் பணி செய்ய முன்வந்துள்ளார்கள். பாராளுமன்ற உறுப்பினர், மாவட்ட சபை உறுப்பினர், உள்ளூர்த் தலைவர்கள், பேராசிரியர்கள், றோட்டரிக் கழகத்தார், லயன்ஸ் கழகத்தார் கூடியிருந்த சபையில் மில்க்வைற் தொழிலதிபர் சிறப்பு விருந்தினராய்க் கலந்துகொண்டு பாலர் பாடசாலையைச் சம்பிரதாயபூர்வமாய்த் திறந்து வைத்துச் சிறப்புரையாற்றினார். பிள்ளைகளை மனிதராக்குவதில் பாடசாலைகள் பன்முகமாகப் பணி புரிதல் வேண்டுமென்பது தொழிலதிபரின் வேணவா.

## புளியமரம்

தமிழ் நாட்டில் நெடுஞ்சாலையோரமாகப் புளிய மரங்கள் நாட்டப் பெற்றுப் புதுப்பொலிவும் வருமானமும் தருகின்றன. அந்த முறையில் எம்மவரும் வீதியோரங்களில் நிழல்தரு மரங்களோடு பயன்தரு மரங்களையும் நாட்டுதல் வேண்டுமென்று பணிபுரியும் தொழிலதிபருக்குப் பக்கத்துணையாகத் தெல்லிப்பளை கிழக்கு கிராமாபிவிருத்திச் சபையினர் புளியபிவிருத்திப் பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளார்கள். கச்சேரி முன்னாள் ஓ. ஏ. பதவிப் பணியில் ஓய்வுபெற்ற சித்தம் சபாரத்தினம் அவர்கள் முயற்சி வெல்வதாக.

## உயிர்ச்சத்து B

விட்டாமின் என்னும் உயிர்ச்சத்துப் பிரிவில் B இனம் உடம்பில் அநேக நன்மைகளைச் செய்வதோடு உற்சாகத்தையும் தருகிறது. அது உணவின்மூலம் கிடைப்பதே நல்லது. முட்டை, பால், மோர், பட்டாணிக் கடலை, கரட், தோடம்பழம் போன்ற உணவுகள் உயிர்ச்சத்தூட்டக்கூடியவை.

## ஆலோசனையும் உபதேசமும்

நாங்கள் மற்றவர்களுக்கு வாசோபசாரமாகக் கூறும் ஆலோசனைகளையும் உபதேசங்களையும் நாமே பின்பற்றி வாழ்ந்தால் எங்கள் வாழ்க்கை உச்சமாக அமைவதோடு நாம் வாழும் நாடும் பொன்னாடாக மாறிவிடும் என்று கலாநிதி யோன்சன் ஒரு சமயம் கூறினார்.

## உண்மை பேசுதல்

உண்மை பேசுதல் என்பது பெரிய அறம். அதனை விடப் பெரிய அறம் வேறில்லை என்று திருவள்ளுவர் வற்புறுத்திக் கூறியுள்ளார். சத்யம் வத என்று வேதம் உண்மை பேசுதலை வற்புறுத்தியுள்ளது. அரிச்சந்திரன் உண்மை பேசி உலகப் புகழ் பெற்றான். நாம் உண்மை பேசுகிறோமோ அல்லோமோ என்று பகல் இரவு என்னும் பொழுதுகள் எம்மைக் கவனித்தவாறு வந்து போகின்றன. இங்ஙனமே வசந்தம், கோடை, மாரி முதலிய பெரும் பொழுதுகளும் நம்மைக் கண்காணிக்கின்றன.

★ வேலை செய்யாதவன் சமூகத்திற்குப் பெருஞ் சுமை ★

## வேடிக்கைப் பழமொழி

மடம் பிடுங்கினவன் நந்தவனத்திற்கு வழி கேட்டானும்:
மடியிலே பூனையைக் கட்டினவன் சகுனம் பார்த்தானும்:
மட்டிப் பயலுக்குத் துட்டக் குருக்கள்.
மட்டைக் கரியையும் மடைப்பள்ளியையும் நம்பலாகாது:
மண்டைக்குத் தக்க கொண்டை முடி.
மண் பூனை எலிபிடிக்குமா?
மந்தியை மருந்துக்குமயிர் கேட்டால் மரத்திலே தாவும்:
மயானத்தில் வீடு கட்டினவன் பேய்க்கு அஞ்சலாமா?
மயிர் சுட்டுக் கரியாகுமா?

## தும்மலுக்குத் தமிழ்வாணன் மருந்து

மூக்கில் அடைப்பு, தும்மல், சளி முதலிய உபத்திரவங்கள் நீங்குவதற்குத் தமிழ்வாணன் கண்ட நடைமுறை மருந்து வில்வங்குச்சிகளை நெருப்பிலிட்டு அந்தப்புகையை முகர்ந்துகொள்வதாகும். அதேபோல் மஞ்சள்துண்டுகளையும் புகைத்து முகர்ந்துகொள்ளலாம்.

## முதலை அடைகாக்கும்

முதலை முட்டையிட்டு அடைகாக்கும். குளத்தில் வாழும் முதலையை ஆய்ந்த ஒருவர் அது குளத்தடியில் மணலைத் தோண்டி 30 முட்டைகள் இட்டு இடைக்கிடை அவற்றின்மேல் படுத்திருந்ததாம். பாதுகாப்பதற்காகவும் அவை பொரிப்பதற்காகவும் ஆகலாம் என்பர்.

## தென்மராட்சி சைவமகாசபை

முன்னர் வேதவனப் பிள்ளையார் கும்பாபிடேகத்திற்குப் பணிசெய்ய வாய்ப்புக்கொடுத்த சைவமகாசபையினர் இப்பொழுது கல்வயலூர் ஆதவன் பாலர்கழகத்திற்குப் பணிசெய்ய வாய்ப்புக்கொடுத்தமைக்கு மில்க்வைற் தொழிலதிபர் நன்றிகூறுகிறார்,

# Riddles and Answers

**Swami Sivananda**

1. What is it that can swallow you too?
2. I have cities, but no houses, forests; but no trees; rivers, but no water. What am I?
3. What do you throw out when you need it, and take it when you don't?
4. What has a bed but never sleeps!
5. What goes up the hill and down the hill but never moves?
6. How many lines has a gramaphone record?
7. What is the difference between school-master and an engine-driver?
8. What has holes but still can carry water?

1. Water 2. Map 3. Anchor 4. River 5. Road
6. One 7. Trains the mind, minds the train. 8. Sponge

## இலட்சுமி கடாட்சம்

தெய்வபக்தி, தூய்மை, அழகு, தைரியம், நேர்மை, முயற்சி, நன்றியுணர்ச்சி, வேலைத்திறமை, புலனடக்கம், உள்ளவர்களிடம் இலட்சுமி கடாட்சம் உண்டு. பசுவோம்பித் தானியவிருத்தி செய்பவனிடம் இலட்சுமி தங்கியிருக்கிறாள்.

புனிதமான கன்னியர், மாட்டுக் கொட்டில், யாகசாலை, அறநெறி வழுவாத தலைவர்கள், தாமரை மலர், அன்னங்கள் மிதக்கும் நீர்நிலை, வற்றாத ஆறு, சாதுக்கள் இலட்சுமி கடாட்சம் உள்ள இடங்கள்.




### மன்னார் தந்த மேதை

## மறைந்த மகான் யோன் மாக் அவர்கள்

வங்கம் நிறைந்த மன்னார்க்கடல் என்று சுந்தரமூர்த்தி நாயனார் பாடியருளிய தேவாரத்துக்குச் சான்றாக விளங்கும் வங்காலையில் தோன்றிய வைத்தியபூபதி யோன்மாக் ஏழைகளின் உற்ற நண்பன். இனிமையாகப் பேசி எல்லோரையும் கவர்ந்த பொறுமையின் சின்னம். புகழ்பெற்ற சமாதான நீதவான். மன்னார் உள்ளூர் ஆட்சிச்சபையில் நீண்டகாலத் தலைவர். அகில இலங்கைக் கிராமச்சங்கத் தலைவர்கள் சம்மேளனத்தின் உப தலைவர். பனையன்பர். பனையபிவிருத்திக்கு ஐந்து லட்சம் பெறுவதற்கு முயன்றவர். மூலிகைகளைத் தம் தோட்டத்தில் வளர்த்தவர். மாந்திரீகத்தால் நோய் நீக்கிய சித்தர். வங்காலையை வாழவைத்தவர். வாழைப் போய்விட்டார். அவருக்காக மன்றாடுகிறோம்.

யாழ்ப்பாணம் சாந்தி அச்சகத்தில் அச்சிட்டவர் திரு: தி: நாகரத்தினம்: யாழ்ப்பாணம் மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகத்தின் சார்பாக வெளியிட்டவர் ''சிவநெறிப்புரவலர்'' க. கனகராசா ஜே. பி. அவர்கள்;
கௌரவ ஆசிரியர்: திரு: க. சி. குலரத்தினம் 1-2-82.